# DIOCESAN CIRCULAR LETTERS

No. C -17/2023 03.10.2023

## நடத்தை மாற்றுதல் பட்டயப் பயிற்சி
## (Behaviour Modification Diploma Course)

**இறை இயேசுவில் அன்புமிக்க அருட்பணியாளர்களே! துறவியர்களே! இறைமக்களே!**

நலமாக வாழ அழைக்கும் இயேசுவின் அருளும் வழிகாட்டுதலும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

இன்று "துன்பக் கதறல், துயரக் கண்ணீர், ஓயாத சண்டை, ஒழியாத புலம்பல், காரணம் தெரியாமல் கிடைத்த புண்கள், கலங்கிச் சிவந்த கண்கள்" (நீமொ 23:29) போன்ற ஏராளமான பாதிப்புகளை உருவாக்கும் நடத்தைகளுக்குத் தாராளமாக குழந்தைகள், சிறார், இளையோர், இளைஞர், பெரியோர், முதியோர் என்ற வேறுபாடு இல்லாமல் பலரும் ஆளாகின்றனர். ஆனாலும் இப்பாதிப்புகள் உருவாகுவதைப்பற்றி தெளிவாகப் புரிந்துணராத அவல நிலையைத்தான் கண்கூடாகக் காண்கின்றோம்.

"இன்று ஒரு நாள் மட்டும்", "ஒரே ஒரு தடவை" என்ற நினைப்பில், "மதுதானே குடிக்கின்றேன்" என்று ஆரம்பித்து போதைப்பொருட்களுக்கு அடிமையாகி (substance addiction), "இணையதளத்தில்தானே விளையாடு கின்றேன்" என்று எண்மின் ஊடகப்போதைக்கு ஆளாகி (digital media addiction), "ஈர்த்திழுக்கும் நடத்தையில்தானே ஈடுபடுகின்றேன்" என்று நடத்தைக் கோளாறுகளில் (behaviour dysfunction) பலரும் சிக்கித் தவிக்கின்றனர்.

எனவேதான் "மனித வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் போதையூட்டும் நடத்தைகள் அனைத்துமே வேண்டாமென தடுக்கப்பட வேண்டும், தவிர்க்கப்பட வேண்டும்" என்று திருத்தந்தை பிரான்சிஸ் தீர்க்கமாய் கூறுகின்றார். யாருமே நடத்தைக் கோளாறுகளுக்கு ஆளாகாமல் முன்தடுக்கவும், ஏற்கெனவே நடத்தைக் கோளாறுகளுக்கு ஆளானவர்கள் நடத்தையை மாற்றி சீரமைக்கவும், மனித நடத்தை முறையாக உருவாகவும் உருவாக்கவும், உளவியல் பின்னணியோடு, அறிவியல் பார்வையுடன் நடத்தையை நாம் அறிந்து கொள்வது அத்தியாவசியமாகின்றது.

இந்த உயரிய நோக்கத்துடன், முதல் இரண்டு கட்டமாகப் "போதைப் பொருளுக்கு அடிமையாதல்" (ஜூலை 2022) மற்றும் "எண்மின் ஊடகப் போதைக்கு ஆளாதல்" (ஜூலை 2023) சார்ந்த இரண்டு பயிற்சிகளை நாம் நடத்தி முடித்திருக்கின்றோம். இப்போது, மூன்றாம் கட்டமாக "நடத்தை

மாற்றுதல்” சார்ந்த 20 வகுப்புகளைக் கொண்ட 100 மணிநேர சிறப்பு பட்டயப் பயிற்சியை நவம்பர் 4-ம் தேதி தொடங்கி ஹோலி கிராஸ் கல்லூரியும், திருப்புமுனை போதைநோய் நலப்பணியும், மாவட்ட சமூகநலத்துறையும் இணைந்து நடத்தி முறையாகத் தேர்ச்சி பெறுபவர்களுக்கு நிறைவில் சான்றிதழ் வழங்கவிருக்கின்றோம்.

நடத்தை மாற்றுதலை இக்காலத்தின் கட்டாயத் தேவையென உணர்ந்து புதிதாக உருவாக்கப்பட்டு நடத்தப்படவிருக்கும் இப்பயிற்சியில் ஆர்வமுடையோரும், நடத்தை மாற்றுதல் பணியில் ஈடுபட்டிருப்போரும், பணியில் ஈடுபட விரும்புவோரும், சிறப்பாகப் பிள்ளைகளை வழிப்படுத்தும் பெற்றோர்களும், மாணவர்களை வழிநடத்தும் ஆசிரியர்களும் உங்கள் பெயரைப் பதிவு செய்திட அன்புடன் வேண்டுகின்றேன்.

நமது மக்கள் எந்தவிதமான நடத்தைக் கோளாறுகளுக்கும் ஆளாகாமல் சிறப்புடன் வாழ்ந்திட இப்பயிற்சி உதவ இறைவன் அருள்புரிவாராக!

கிறிஸ்துவின் மனநிலையில்
Sd/-
**+ ஆயர் நசரேன் சூசை**